**கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 25 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் திகதியன்றும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மாகாண திறைசேரி திணைக்களத்திடமிருந்து ஆதனங்களை கைமாற்றல், சீதனம் மற்றும் நன்கொடைகள் மீது அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வையானது முறையாக கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களின் முத்திரை தீர்வையாக கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | செம்மையான நிதிக்கூற்று தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடு தற்போது நிவர்த்தி செய்யப்பட்டு எதிர்காலத்தில் செம்மையான நிதிக்கூற்று தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையின் முகப்பு அலுவலகத்தை உருவாக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் நிதியில் கொள்வனவு செய்யப்பட்டு கணனித் தொகுதிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் போன்றவை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | கணனித் தொகுதிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் போன்றவை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (இ) | 2018ம் ஆண்டிற்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 1,639,841 நிதிக்கூற்றில் ரூபா 2,082,066 ஆகக் தவறாக காட்டப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

### 1.3.3 நிகழத்தக்க பொறுப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளித்தரப்பினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக தகவல்கள் நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முன்னெடுக்கப்படும் வெளித்தரப்பினருக்கு எதிரான வழக்கு தொடர்பாக தகவல்கள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய கணக்குகள் | | |
| | நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள வீதவரிகள் ரூபா 11,937,904 தொகை தொடர்ச்சியாக 10 ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டு வருகிறது. | நிலுவை வீதவரிகள் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற பதவி வறிதாகியவர்கள் மற்றும் இளைப்பாறிய 06 ஊழியர்களுக்கு கடனில் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 51,626 தொகை 1998 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காட்டப்பட்டுல்லது. | நிலுவையாகவுள்ள ஊழியர் கடன்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**1.3.5 ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 103,644,925 தொகை பெறுமதியான 06 விடயங்களுக்கு காணி உறுதிகள், உரிமைப்பத்திரங்கள், போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கனக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுதள்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காகவும் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அக் குழுக்கள் கணக்காய்வுத் திகதியான 2020பெப்ரவரி வரை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சபையின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்காகவும் வேண்டி தனித் தனி குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மீளாய்வாண்டின் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவீனம் என்பன வரவு செலவு திட்டத்துடன் ஒப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெவ்வேறுபட்ட வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக “வற் பற்றுச்சீட்டு” (VAT Invoice) பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளை வழங்கிய வினியோகஸ்தரினால் சமர்ப்பிக்கப்படும் வற் பற்றுச்சீட்டுக்கு சேர்க்கப்பட்ட வரி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,145,655 ஆக இருந்ததுடன், அதற்கு நேரெதிராக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,601,133 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,511,000 | 2,550,000 | 1,084,360 | 11,937,904 | 4,150,000 | 13,550,280 | 1,612,376 | 11,937,904 |
| வாடகைகள் | 9,794,900 | 9,802,900 | 5,913,416 | 1,518,226 | 13,588,600 | 6,043,392 | 4,724,363 | 1,329,028 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,175,000 | 4,185,000 | 3,057,390 | 252,460 | 2,835,000 | 3,121,463 | 3,121,463 | -- |
| ஏனைய வருமானம் | 19,290,000 | 19,295,000 | 13,632,138 | 4,493,677 | 19,408,000 | 14,234,567 | 12,161,501 | 2,082,066 |
| மொத்தம் | 35,770,900 | 35,832,900 | 23,687,304 | 18,202,267 | 39,981,600 | 36,949,702 | 21,619,703 | 15,348,998 |

## 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நீண்ட காலமாக காணப்படும் வர்த்தக தளங்கள் தொடர்பான வாடகைகள் மீதான நிலுவை ரூபா 943,595 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவை அறவீட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஆ) விலங்கறுமனை வருமானம் | | |
| விலங்கு அறுமனைச் சட்டத்தின்படி எருமை மாடுகளை வெட்டுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள போதிலும் சபை விலங்கமறுமனையில் பெண் எருமை மாடுகள் உட்பட சகல மாடுகளும் அறுக்கப்படுகின்றன.<br>i. இறைச்சி கடைக்காரரிடமிருந்து ஒரு பெண் எருமை மாட்டுக்காக ரூபா 1,500 அறவிடப்படுகிறது.<br>ii. விலங்கு அறுப்பவருக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி வெற்றிடம் காணப்படுகின்ற போதிலும், ஒருவரை நியமிக்காது மாடு அறுப்பவருக்கு ஒரு மாட்டுக்கு ரூபா 50 கொடுக்கப்படுகின்றது. | விலங்கு அறுமனைச் சட்டத்தின்படி விலங்கு அறுமனை நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சோலைவரி அறவிடப்படாத ஆவணங்கள்<br>---------------------------------------------<br>பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் 14 வட்டாரங்களில் 08 வட்டாரங்களுக்கு ஆதனங்கள் மதிப்பிடப்பட்டு சோலைவரி அறவிடப்படுவதில்லை. | சோலைவரி மீதான கழிவு வழங்கப்படுவதற்கான “K” படிவம் உரிய காலப்பகுதியில் பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஈ) | 1996 ம் ஆண்டில் இருந்து 2019ம் ஆண்டு வரை தேசிய கடதாசி உற்பத்தி ஆலையிடம் இருந்து அறவிட வேண்டிய வீதவரி ரூபா 11,937,904 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரிக்ள தொடர்பாக மீளாய்வாண்டின் உண்மையாக அறவீட வேண்டிய நிலுவை வருமானம் உள்ளடங்களாக சரியான தொகை கணக்குகளுக்க காட்டப்படுதல் வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (உ) | JCB- ZA-5021 ம் இலக்க இயந்திரம் கொள்வனவு செய்த 17/01/2017 திகதி தொடக்கம் 26/09/2019 வரை 3274.8 மணித்தியாலங்கள் வேலை செய்துள்ள போதிலும் கடந்த 04 மாதங்களாக பழுதடைந்து காணப்படுவதுடன் பெரும் தொகையான பணமும் திருத்த பராமரிப்புக்காக செலவிடப்படுகின்றது. | JCB இயந்திரத்தினை பொது ஸ்தாபனங்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற போது நட்டம் ஏற்படா வண்ணம் முகாமை செய்தல் வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் தீர்வைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,639,841 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்ததுடன், முத்திரைக் கட்டணம் கணக்கிடப்பட்டு கணக்கில் காட்டப்படவில்லை. | முத்திரை தீர்வையானது பிரதேச சபையினால் கணிப்பிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

(ஆ) முத்திரை தீர்வைகள்

-------------------------

| | | |
|---|---|---|
| (i) கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரை தீர்வையானது பிரதேச சபையினால் கணிப்பிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ii) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால், கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதி நியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2017, 2018 மற்றும் 2019 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்கத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை கணக்கீடப்பட்டு அறிவட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (iii) முத்திரை தீர்வையானது பிரதேச சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானமாகும். இருந்தும், 2010-2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முத்திரை தீர்வை ரூபா 2,598,641 தொகை கணக்காய்வுத் | காணி விற்பனை தீர்வை வருமானங்கள் வருடா வருடம் கிடைப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

திகதியான ஏப்ரல் 2019 வரை பிரதேச சபைக்கு கிடைக்கப்பெறவில்லை. இதனால், முத்திரை தீர்வை வருமானம் வருடாவருடம் கிடைக்கப்பெறாது இழக்கப்படுகின்றன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உப விதிகள்<br>1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேணடும். இருந்தும், பிரதேச சபையினால் 2012 ஆகஸ்ட் 04 ஆம் திகதியில் சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் உப விதிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஆ) | திண்மக் கழிவு முகாமைத்துவம்<br>திண்ம கழிவு முகாமைத்துவத்துவ விடயங்கள் முறையாக மேட்கொல்லப்பட்டிருந்ததுடன் சேதன பசளை உற்பத்தி மற்றும் மீள்சுழற்சி விற்பனை போன்ற திட்டங்களை முன்மொழியப்பட்டிருந்தது. இருந்தும், இவற்றை தவிர வேறு வகையில் வருமானத்தை உருவாக்கும் திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கவில்லை. | திண்ம கழிவு முகாமைத்துவத்துவ விடயங்கள் முறையாக மேட்கொல்லப்பட்டிருந்ததுடன் வருமானத்தை உருவாக்கும் திட்டங்கள் முன் மொழியப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2030 ஆம் ஆண்டு அறிந்து கொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பான அளவிடுவதற்கான குறி காட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) எக்ஸ்வேட்டர் இயந்திரம் ஒன்றை மாதாந்தம் ரூபா 566,000 வருமானம் பெறமுடியுமென்ற திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், இவ்வாறு வருமானம் ஈட்ட வில்லை. மேலும் இவ் இயந்திரத்தின் மூலம் 2017.04.31 இல் இருந்து 2018.04.23 வரை தனியார் ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு 491 மணித்தியாலங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இவரிடமிருந்து இன்னும் அறவிட வேண்டிய ரூபா 433,880 தொகை 21 மாதங்கள் கடந்தும் அறவிடப்பட்டிருக் கவில்லை | முன்மொழியப்பட்டதன் பிரகாரம் வருமானம் ஈட்டுலதோடு நிலுவையினை அரவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணிகள் மற்றும் கட்டிடங்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களை சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

### 3.3.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | (i) ஒரு லீற்றர் எரிபொருளுக்கு வாகனங்கள் ஓடக்கூடிய துாரத்தை வருடாந்தம் இயந்திரம் பொறியியலாளரினால் பரிசோதிக்கப்பட வேண்டும் என அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சினால் EST-6/TPORT/05/3515 இலக்க 2016.12.29 ம் திகதியிட்ட 30/2016 சுற்று நிருபத்திற்கு இணங்க பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பரீட்சிப்பு வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | (ii) 08 மோட்டார் வாகனங்களுக்கு மோட்டார் வாகன பதிவுச் சட்டத்தின் படி பதிவுப் புத்தகங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | வாகன ப பதிவுப் புத்தகங்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | (iii) 23 வாகனங்களுக்கு மட்டுமே போக்கு வரத்து அனுமதிப் பத்திரம் (Revenue License) உள்ளது. | போக்கு வரத்து அனுமதிப் பத்திரம் ஒவ்வொரு வாகனங்களுக்கும் பெற்றுக்கொள்ள வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | (iv) 09 உபயோகிக்க முடியாத மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத வாகனங்கள் காணப்படுகின்றன. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| | (v) பல வருடங்களாக வாகனங்கள் பெறுமதி மதிக்கப்பட்டு இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | வாகனங்கள் பெறுமதி மதிக்கப்பட்டு கணக்குக்கு கொண்டுவரப்படவேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும் |